# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093690

1. District மாவட்டம் : விருதுநகர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு, விருதுநகர் Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 06/2021 Date: நாள் 07.07.2021

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of Prevention of
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Corruption (Amendment)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 02.07.2021 Date from : நாள் முதல் and 04.07.2021 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 10.30 hrs Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.07.2021 18.00 hrs Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: வாதியின் வீட்டு முன்பு. 45 கி.மீ வடமேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. சந்திர நாராயணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பேச்சிநாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: முன்னாள் இராணுவ வீரர் தற்போது வங்கி பாதுகாவலர் (g) Address முகவரி : க.எண். 20/1, கோவிந்தன் நகர் காலனி, அத்திகுளம் செங்குளம் பஞ்சாயத்து, சிவகாசி ரோடு, திருவில்லிபுத்தூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. சண்முகராஜா, ஊராட்சி செயலர், அத்திகுளம் செங்குளம் ஊராட்சி அலுவலகம். சிந்தாமணிபுத்தூர், திருவில்லிபுத்தூர் புறநகர், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு
—

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்
—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
—

பணித்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நான் இன்று 07.07.2021 மாலை 6.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர், சிவகாசி ரோடு, அத்திகுளம் செங்குளம் பஞ்சாயத்து, கோவிந்தன் நகர் காலனி, கதவு எண். 20/1 என்ற முகவரியை சேர்ந்த திரு. லோகநாதன் என்பவரின் மகன் திரு. சந்திர நாராயணன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மேற்படி மனுமீது இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப் பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the investigation / Refused investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 07/07/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

15. Date & Time of despatch to the court: 08.07.2021 at 06.45 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. BOOMINATHAN,
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
V&AC, VNR.

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவின் குற்ற எண். 06/2021 பிரிவு 7 of PC (Amendment) Act 2018ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

இன்று (07.07.2021) இரவு 8.00 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/2021 பிரிவு 7 of PC (Amendment) Act 2018 ஆக எதிரி திரு. சண்முகராஜா, ஊராட்சி செயலர், அத்திக்குளம் செங்குளம் பஞ்சாயத்து அலுவலகம் என்பவர் மீது வழக்குப்பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர்:- பே. சங்கரநாராயணன் (வயது 51), த/பெ. கோ. பேச்சிநாதன், க.எண்.20/1, கோவிந்தன்நகர் காலனி, அத்திக்குளம் செங்குளம் பஞ்சாயத்து, சிவகாசி ரோடு, திருவில்லிபுத்தூர் - 626 125. பெறுநர்:- திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன். எனக்கு இரு ஆண் மக்கள் உள்ளனர். நான் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து கடந்த 2006ஆம் வருடம் ஓய்வு பெற்று தற்போது இராஜபாளையம் To தென்காசி ரோட்டில் அமைந்துள்ள சாந்தி தியேட்டர் வளாகத்தில் உள்ள பாரத ஸ்டேட் வங்கிகிளையில் துப்பாக்கி ஏந்திய காவலாளியாக பணிபுரிந்து வருகின்றேன். எனக்கு அத்திக்குளம் செங்குளம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கோவிந்தன் நகர் காலனியில் சர்வே எண் 455/3A2 என்ற எண்ணில் எனது சொந்த காலிமனை இருந்தது. அந்த காலிமனையில் 896 சதுர அடியில் என்னுடைய பெயரில் புதிய வீடு கட்டுவதற்கு அத்திக்குளம் செங்குளம் ஊராட்சியில் முறைப்படி கட்டிட அனுமதி உத்தரவு (கட்டிட அனுமதி எண்:18/2019-2020 நாள்.24.02.2020) பெற்று புதிய வீட்டைக்கட்டி முடித்தேன். அந்த புதிய வீட்டிற்குப் பெற்ற தற்காலிக மின் இணைப்பை (Tariff-V) ரத்து செய்து, நிரந்தர வீட்டு மின்இணைப்பு (Tariff-I) பெறுவதற்கு, அந்த வீட்டிற்கான வீட்டுவரி ரசீது தேவைப்பட்டது. ஆகையால் நான் புதிதாகக்கட்டியிருக்கும் வீட்டிற்கு வீட்டுவரி விதித்து கொடுக்குமாறு தலைவர், அத்திக்குளம் செங்குளம் பஞ்சாயத்து, திருவில்லிபுத்தூர் வட்டம் என்ற முகவரிக்கு ஒரு மனுவை கடந்த 02.07.2021ஆம் தேதி தயார் செய்து, அத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்களை இணைத்து அன்றே காலை சுமார் 10.30 மணியளவில் அத்திக்குளம் செங்குளம் பஞ்சாயத்து அலுவலகம் சென்று பஞ்சாயத்து கிளார்க் சண்முகராஜா என்பவரை சந்தித்து, நான் கட்டியுள்ள புதிய வீட்டிற்கு வீட்டுவரி விதிக்க வேண்டுவது தொடர்பாக கொண்டு சென்ற மனுவை கொடுத்து விபரம் கேட்டேன். அதற்கு அவர் மனுவை பெற்றுக்கொள்ளாமல், நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை உங்களது வீட்டிற்கே வந்து வீட்டையும் பார்த்து விட்டு மனுவையும் பெற்றுக்கொள்கிறேன் என்றும், அப்போது உங்களது புதிய வீட்டிற்கு வீட்டுவரி விதிக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.6000/- ரெடிபண்ணி

வைத்துக்கொண்டு எனக்கு நீங்கள் தரவேண்டும் என்றும், அப்பதான் உங்க புதிய வீட்டிற்கு வீட்டுவரி விதிக்க ஏற்பாடு செய்வேன் என்றும் கூறினார். அதற்கு நான் அவரிடம் எதற்கு தம்பி ரூ.6000/-, அவ்வளவு பணம் என்னால கொடுக்க முடியாது தம்பி நீங்க பார்த்து செய்யுங்க தம்பி என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்க வீட்டிற்கு போங்க சார், இது வீட்டுவரி விதிக்குறதுக்கு ஏற்பாடு செய்யுறதுக்காக எல்லாரும் கொடுக்குறதுதான் சார் என்றும், நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில வீட்டிற்கு வருவேன்லசார் அப்ப இந்த மனுவையும் கொடுங்க, நான் கேட்ட பணம் ரூ.6000/-த்தையும் ரெடிபண்ணி வச்சுக்கொடுங்க சார் என்று சொல்லி அனுப்பி வைத்தார். பின்னர் கடந்த 04.07.2021ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 11.00 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் இருந்தபோது, பஞ்சாயத்து கிளார்க் சண்முகராஜா வந்து என்னை அழைத்துச்சந்தித்தார். அப்போது நான் அவரிடம் இந்தா தம்பி அந்த மனு என்று மனுவைக்கொடுத்தேன். அப்போது அவர் அந்த மனுவை பெற்றுக்கொண்டுவிட்டு, உங்க புதிய வீட்டிற்கு வீட்டுவரி விதிக்க ஏற்பாடு செய்வதற்கு நான் கேட்டப்பணம் ரூ.6000/- எங்க சார் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், அந்த பணம் ரூ.6000/-த்தை இன்னும் ரெடிபண்ணல தம்பி என்றும், என்ன தம்பி நான் ஒரு எக்ஸசர்வீஸ்மேன்னு கூட பார்க்காம எங்கிட்ட இவ்வளவு பணம் கேட்குறீங்களே தம்பி என்று சொன்னேன். அதற்கு அவர், சரிசார் நீங்க வேண்ணா ரூ.2000/-த்தை குறைத்துக்கிட்டு ரூ.4000/-த்தை ரெடிபண்ணி வைச்சுக்கோங்க சார் என்றும், நான் வியாழக்கிழமை (08.07.2021) காலையில் சுமார் 08.00 மணிக்குமேல் இதேபோல் உங்களது வீட்டிற்கே வந்து உங்கள சந்திக்கிறேன் சார் என்றும், அப்போது கண்டிப்பா நான் கேட்ட பணம் ரூ.4000/-த்தை என்னிடம் கொடுக்கனும் சார் என்றும், அப்பத்தான் உங்களது புதிய வீட்டிற்கு வீட்டுவரி விதிக்க ஏற்பாடு செய்வேன் சார் என்றும் கறாராக கூறினார். ஆகையால் நானும் வேறுவழியில்லாமல் சரி தம்பி நீங்க கேட்ட பணம் ரூ.4000/-த்தை ரெடிபண்ணி வச்சுக்கிறேன் தம்பி, எப்படியாச்சும் என்னுடைய புதிய வீட்டிற்கு வீட்டுவரி விதிக்க ஏற்பாடு செய்யுங்க தம்பி என்று சொன்னேன். சரியென்று சொல்லிவிட்டு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் யோசனை செய்து பார்த்ததில் நியாயமாக அவர் செய்யவேண்டிய அரசு வேலைக்கு நான் எதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டுமென்றும், இந்திய தேசிய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற எனக்கே இந்த நிலமையா என்றும் நினைத்து அவருக்கு லஞ்சம் தர மனம் இல்லாமல், அன்றே (04.07.2021) லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க இருந்தேன். ஆனால் என்னுடைய சொந்த வேலை மற்றும் அலுவல்பணி நிமித்தம் காரணமாக அன்று புகார் கொடுக்க வரமுடியவில்லை. அதனால் இன்று 07.07.2021ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் விருதுநகர் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து உங்களை நேரில் சந்தித்து விபரம் கூறி நான் புதிதாக

கட்டிருக்கும் வீட்டிற்கு வீட்டுவரி விதிக்க ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் ரூ.4000/- லஞ்சப்பணம் கேட்ட அத்திக்குளம் செங்குளம் பஞ்சாயத்து கிளார்க் சண்முகராஜா என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க, அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.4000/-த்தையும் ரெடிபண்ணி கையில் வைத்துக்கொண்டு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன்.இப்படிக்கு (Sd)பே.சங்கரநாராயணன், 07.07.2021. Sir, Received the complaint on 07.07.2021 at 18.00 hrs. The genuiness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found bad and found prima-facie for the mentioned allegation of the complaint, since the registration of regular case is warranted in the prima-facie. The matter is intimated to the SP SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.06/2021 u/s 7 of PC (Amendment) Act 2018 at 20.00 hrs today on 07.07.2021 and took up for investigation (Sd) (R.Boominathan) 07.07.2021 Inspector of Police, V&AC, Virudhunagar.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM/Spl.Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

07/07/2021
INSP of Police,
V&AC, VNR.